செய்தி வெளியீடு எண்: 138 நாள்: 21.02.2019

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் 19.2.2019 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மின்னாளுமை முகமைக்கும், திருச்சிராப்பள்ளி – இந்திய மேலாண்மை நிறுவனம், USA - Virginia Tech India Centre for Advanced Research & Education மற்றும் Pontaq-UK India Innovation Fund ஆகிய நிறுவனங்களுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

தமிழ்நாடு அரசு முகமைகளில் புதிய தொழில்நுட்பங்களான தொகுப்பு தொடர் (Block Chain) இணையம் சார்ந்த பொருட்கள் (Internet of things), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) போன்றவற்றில் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு மேற்கொள்ள உதவி மற்றும் ஒத்துழைப்பு வழங்கிடும் வகையில், தமிழ்நாடு மின்னாளுமை முகமைக்கும், திருச்சிராப்பள்ளி – இந்திய மேலாண்மை நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்மூலம், அரசுத் துறைகளில் உள்ள உயர் அலுவர்களுக்கு வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் பயிற்சி மற்றும் சான்றிதழ் வகுப்புகள் நடத்துதல், மின்னணு மயமாக்கப்பட்ட கிராமப்புற திட்டங்கள் போன்ற முயற்சிகள் மூலம் கிராமம் மற்றும் நகர்புறங்களுக்கு இடையேயான மின் இலக்க இடைவெளியை (Digital Divide) சமன் செய்தல், அரசு மற்றும் அரசு சாரா முகமைகளில் சமூக பொறுப்பு ஆய்வு மேற்கொண்டு அதன் விளைவுகளை கண்டறிதல் போன்றவைகளுக்கு வழிவகை செய்யப்படும். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் சார்பில் அதன் ஆணையர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திரு.சந்தோஷ் கே. மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களும், திருச்சிராப்பள்ளி – இந்திய மேலாண்மை நிறுவனத்தின் சார்பில் டாக்டர் பீமராயா மெட்ரி அவர்களும் கையெழுத்திட்டனர்.

அரசு துறைகள் மற்றும் மின்ஆளுமையில் ஆராய்ச்சி மேற்கொள்ள உதவி மற்றும் ஒத்துழைப்பு வழங்கிடவும், தமிழ்நாடு அரசின் கல்வி, சுகாதாரம், வேளாண்மை போன்ற துறைகளில் திறன் மேம்பாடு செய்திடவும், மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த அறிவு பகிர்தலுக்கான கருத்தரங்குகள் நடத்துதல் போன்ற பணிகளுக்காக தமிழ்நாடு

மின்னாளுமை முகமைக்கும், அமெரிக்க நிறுவனமான Virginia Tech India Centre for Advanced Research & Education-க்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழ்நாடு மின்னாளுமை முகமை சார்பில் அதன் ஆணையர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திரு.சந்தோஷ் கே. மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களும், Virginia Tech India Centre for Advanced Research & Education நிறுவனம் சார்பில் டாக்டர் எம்.கே. பத்மநாபன் அவர்களும் கையெழுத்திட்டனர்.

தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் தொழில்நுட்ப பரிமாற்றத்தை மேம்படுத்திடவும், நிதித் தொழில் நுட்பம் (**FinTech**), திறன்மிகு தொழில்நுட்பம் **(Smart Technology)** மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பம் **(Emerging Technology)** போன்ற பிரிவுகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கிலும், தமிழ்நாடு மின்னாளுமை முகமைக்கும், Pontaq-UK India Innovation Fund நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான சிறப்பு மையத்தினை உருவாக்கிட தமிழ்நாடு மின்னாளுமை முகமைக்கு தேவையான நிதி உதவியினை Pontaq நிறுவனம் அளிப்பதோடு, இந்த சிறப்பு மையமானது மின்னாளுமை தீர்வுகளை வழங்கும் தொழில் முனைவோர் நிறுவனங்களை ஒருங்கிணைத்து செயல்படவும் வழிவகை செய்யும். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழ்நாடு மின்னாளுமை முகமை சார்பில் அதன் ஆணையர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திரு.சந்தோஷ் கே. மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களும், Pontaq-UK India Innovation Fund நிறுவனத்தின் சார்பில் திரு மகேஷ் இராமசந்திரன் அவர்களும் கையெழுத்திட்டனர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம்.மணிகண்டன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 21.2.2019**